*செ.வெ.எண்: 39* *நாள்: 18.09.2016*

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழகஅரசு சார்பில் நடப்பாண்டில் 3440 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை நகர்மன்றத்தில் சமூகநலத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பில் 240 ஏழை, எளிய கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் இன்று (18-9-2016) துவக்கி வைத்தார்கள்.

இந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் அவர்கள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். ஏழை பெற்றோர்கள் தங்கள் மகள்களின் வளைகாப்பு நிகழ்ச்சியை நடத்துவதில் ஏற்படும் சிரமங்களை போக்கும் வகையில் கர்ப்பிணித் தாய்மார்களின் வளைகாப்பு நிகழ்ச்சியை சமுதாய வளைகாப்பு விழாவாக நடத்திட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டாரத்தை சார்ந்த 240 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு அரசு சார்பில் மஞ்சள், குங்குமம், மாலை, வழைப்பழம், ரவிக்கைத் துணி, வெற்றிலை பாக்கு, மஞ்சள் கயிறு, வளையல், சில்வர் தட்டு மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு வழிகாட்டும் கையேடு ஆகியவை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சர்க்கரை பொங்கல், புளிசாதம், தயிர்சாதம், எலுமிச்சை சாதம், தேங்காய் சாதம், பாயாசம், பாசிப்பயறு, பேரிச்சம்பழம், சாக்லெட், பிஸ்கட் ஆகிய உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அங்கன்வாடியில் பதிவு செய்துள்ள அனைத்து ஏழை கர்ப்பிணித் தாய்மார்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ளனர். எனவே, தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை கர்ப்பிணி தாய்மார்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் பேசினார்.

இந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் அவர்கள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். ஏழை பெற்றோர்கள் தங்கள் மகள்களின் வளைகாப்பு நிகழ்ச்சியை நடத்துவதில் ஏற்படும் சிரமங்களை போக்கும் வகையில் கர்ப்பிணித் தாய்மார்களின் வளைகாப்பு நிகழ்ச்சியை சமுதாய வளைகாப்பு விழாவாக நடத்திட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டாரத்தை சார்ந்த 240 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்திலுள்ள 13 வட்டாரங்களில் உள்ள 3440 கர்ப்பிணிகளுக்கு நடப்பு 2015-16ம் ஆண்டில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் கர்ப்பிணித்தாய்மார்கள் கர்ப்பம் என்று தெரிந்தவுடன் அங்கன்வாடியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். கர்ப்ப காலத்தில் தொடர்ந்து உரிய மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். தங்கள் அன்றாட உணவில் பச்சை கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள், மீன், முட்டை போன்ற சத்தான உணவுகளை உண்ண வேண்டும். போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும். கடின வேலைகளை குறைத்து, பகலில் இரண்டு மணி நேரத்திற்கு குறையாமல் ஓய்வெடுக்க வேண்டும். எடை, இரத்த அழுத்தம் போன்றவற்றை பரிசோதிக்க வேண்டும்.

..2..

கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவ வலி ஏற்படும் பொழுது 108 அவசர சிகிச்சை ஊர்தி மூலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்து பிரசவம் பார்த்துக்கொள்வதே தாய்க்கும், சேய்க்கும் பாதுகாப்பாக அமையும் . அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தவுடன் உரிய முறையில் தடுப்பூசிகளை போட வேண்டும். இதன் மூலம் டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு கால நிதியுதவி தொகை ரூ.12000-ஐ பெற முடியும். குழந்தை பிறந்தவுடன் குழந்தையை பராமரிக்கும் வகையில் 16 வயையான பொருட்கள் அடங்கிய அம்மா பரிசுபெட்டகம் வழங்கப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை அனைத்து தாய்மார்களும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், மாவட்ட திட்ட அலுவலர்(ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்) திருமதி.சிறியபுஷ்பமணிமேகலை, நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.பாஸ்கர், திரு.ராமதாஸ், மாவட்ட கூட்டுறவு அச்சக சங்கத்தலைவர் திரு.வே.மு.குமார், அரசு வழக்கறிஞர் திரு.ரவிச்சந்திரன், ஒன்றிக்குழுத்தலைவர் திருமதி.வெள்ளையம்மாள்பழனிவேலு, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திருமதி.கண்ணம்மாள்சின்னப்பா, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**